1979 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தோல் ஏற்றுமதியைத் தனிப்பட்டவர்கள் அரசின் அனுமதியோடு செய்து வருகிறார்கள். இத்தாலி நாட்டுக்கு இதற்கு முன்பு அனுப்பப்பட்டபோது பிரச்சினை இருந்தது. அந்தப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுத்துக் கொண்டதன் பேரில் இப்போது பிரச்சினை இல்லை. இப்போது சான்றிதழ்களோடு அனுப்பிக் கொண்டிருக்கிற காரணத்தால் பிரச்சினை இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(6) அரசினர் சட்டமுன்வடிவுகள்.

(அ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(7) அறிவிப்புகள்.

(அ) கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(6) அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி).

(ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது

(ஈ) உள்ளாட்சி அதிகாரமன்றங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.